செ.வெ.எண்.359/2009/செமதொஅ நாள்:22.10.2009

**காஞ்சிபுரம் அருகே உள்ள கீழ்கதிர்பூர் கிராமத்தில் பட்டுப்பூங்கா அமைப்பதற்கான இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது என மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் தெரிவித்தார்.**

காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி அலுவலகத்தில் காஞ்சிபுரத்தில் பட்டுப்பூங்கா அமைப்பதற்கான கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தோஷ் கே.மிஸ்ரா இ.ஆ.ப, காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.பி.விஸ்வநாதன், சட்டமன்ற உறுப்பினர் திருமதி.சக்தி பெ.கமலாம்பாள், மாவட்ட ஊராட்சித்தலைவர் திரு.த.துரைசாமி, துணை இயக்குநர் திரு.பழனிச்சாமி, திட்ட நிர்வாக ஆலோசனைக் குழு நிர்வாக உறுப்பினர் திரு.செல்வம், இயக்குநர் ஜெயமோகன், பட்டுத் தொழில் தொடர்புடைய பட்டு விற்பனையாளர்கள், பட்டு நெசவாளர்கள், சாய நிறுவனத்தினர், நெசவாளர் பிரதிநிதிகள், பட்டு கூட்டுறவுச் சங்க முன்னாள் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

கலந்தாய்வுக் கூட்டத்தின் முடிவில் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் செய்தியாளர்களுடன் பேசியதாவது, காஞ்சிபுரத்தில் நடைபெற்ற அண்ணா நூற்றாண்டு நிறைவு விழா கூட்டத்தில் காஞ்சிபுரத்தில் ரூ.40 கோடி மதிப்பீட்டில் பட்டுப்பூங்கா அமைக்கப்படும் என முதல்வர் தெரிவித்தார். இதற்காக தமிழக முதலமைச்சர், மாண்புமிகு துணை முதலமைச்சர், மாண்புமிகு பாரத பிரதமர், மாண்புமிகு மத்திய ஜவுவளித்துறை அமைச்சர் ஆகியோருக்கு மாவட்ட மக்களின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும், கூட்டத்தில் பட்டுப் பூங்கா அமைப்பதற்கான கருத்து கேட்கப்பட்டது. கூட்டத்தில் பட்டு பூங்கா அமைப்பதற்கான சாத்திய கூறுகள், பட்டுப் பூங்கா அமைப்பதால் நெசவாளர்களுக்கு ஏற்படும் நன்மைகள், இடம் தேர்வு செய்வது, சாலைகள் அமைப்பது, கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பது, பொதுவசதி போன்ற உள்கட்டமைப்பு வசதி அமைப்பது குறித்து நெசவாளர் பிரதிநிதிகள், பட்டு கூட்டுறவுச் சங்க முன்னாள் பிரதிநிதிகள் ஆகியோர் தங்கள் கருத்துக்களை எடுத்துக் கூறினார்கள். கூட்டத்தின் முடிவில் காஞ்சிபுரம் பேருந்து நிலையத்திலிருந்து 5 கிலோமீட்டர் தொலைவிலும், வியாபாரிகள் நெடுஞ்சாலையில் இருந்து நகருக்குள் வராமல் பட்டு பூங்காவிற்கு எளிதில் செல்லக் கூடிய வகையில் கீழ்கதிர்பூர் கிராமத்தில் 50 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இது குறித்து கூட்டத்தில் உள்ளவர்களிடம் கலந்தாலோசித்து முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இது குறித்த கருத்துரு மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும். இதுகுறித்த விரிவான ஆலோசனைக் கூட்டம் வருகின்ற 28ம் தேதி நடத்தப்படும் என தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.






வெளியிடுபவர்

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.